பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 07 2024 **FRIDAY** **6.30 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மதுரையில் நடைபெற்ற கோடைக்கால மீனவர் சந்திப்பு மாநாட்டில், மீன்வள தொழில்நுட்ப கண்காட்சியை மத்திய அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று தொடங்கிவைத்தார்.

2. நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சி இளைஞர்களுக்கு மிகுந்த பயனை அளித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

3. ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.

4. விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

5. நீலகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*<u>--இனி விரிவான செய்திகள்----</u>*

<<<<<<<>>>>>>

மத்திய மீன்வளத்துறை சார்பில் கோடைகால மீனவர் சந்திப்பு மாநாடு இன்று மதுரையில் நடைபெற்றது.

இதனையொட்டி, மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும் கண்காட்சியை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் திறந்துவைத்தார்.

இத்துறைக்கான இணையமைச்சர்கள், திரு எஸ் பி சிங் பாஹல், திரு ஜார்ஜ் குரியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

உத்தரப்பிரதேசம், பீகார், அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், ஒடிஷா ஆகிய மாநிலங்களின் மீன்வளத்துறை அமைச்சர்களும் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

மீன்வளத்துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றங்களை விளக்கும் காணொலி காட்சியும் திரையிடப்பட்டது. பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் குறித்த விழிப்புணர்வு படக்காட்சியும் திரையிடப்பட்டது. மீன்களை பதப்படுத்துவது, பாதுகாப்பாக சந்தைகளுக்கு எடுத்துச்செல்வது, மீன்வள வளாகங்களை விரிவுபடுத்துவது, டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மீன் விற்பனையை மேம்படுத்துவது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

<<<<<<<>>>>>>

அரசின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் இளைஞர்களுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள நிர்வாகவியல் கல்லூரி ஒன்றில் “வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் உயர்கல்வி நிறுவனங்களின் பங்கு” என்ற தலைப்பில் உரையாற்றிய அவர், நாட்டில் வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசு நிர்வாகம் சிறப்பாக செயல்படுவதால் வியத்தகு பொருளாதார வளர்ச்சியை நாடு அடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டுக்கு உகந்த நாடாக இந்தியா உள்ளது என உலக வங்கி பாராட்டியுள்ளதை குறிப்பிட்ட அவர், சர்வதேச செலாவணி நிதியம் நாட்டின் மின்னணு கட்டமைப்பு உலகிற்கு முன்மாதிரியாக உள்ளது என்று கூறியதையும் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க உயர்கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

தொழில்நுட்பம், மின்னணு கட்டமைப்புக்கான மாற்றம், நீடித்த பொருளாதார வளர்ச்சி, மருத்துவம், வேளாண்மை, உணவு பாதுகாப்பு, திறன்மேம்பாடு, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் உள்ளிட்டவை நாட்டை வளர்ச்சிப்பாதையில் பயணிக்க வைத்திருப்பதாகவும் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கடல்சார் துறையின் வளர்ச்சிக்கு முக்கிய மைல்கல்லாக கேரள மாநிலத்தின் விழிஞ்ஞம் துறைமுகம் விளங்குகிறது என்று மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தையடுத்த விழிஞ்ஞம் துறைமுகத்திற்கு முதல் முதலாக வந்துள்ள சான் ஃபெர்னான்டோ சரக்கு கப்பல் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டில் உள்ள துறைமுகங்களை உலகத்தரத்திற்கு உயர்த்துவதற்கான தொலைநோக்கு பார்வையுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன், விழிஞ்ஞம் துறைமுகம் மேலும் பல வசதிகளுடன் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

துறைமுகங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக குறிப்பிட்ட அவர், கேரளாவின் வளர்ச்சியில் விழிஞ்ஞம் துறைமுகத்தின் பங்கு மகத்தானது என்று கூறினார்.

மாநிலத்தில் முக்கிய பொருளாதார கட்டமைப்பாக இந்த துறைமுகம் விளங்குவதாக திரு பினராயி விஜயன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூட்டுறவு அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை சார்பில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பிலான நான்கு புதிய திட்டப்பணிகளை தொடங்கிவைத்து பேசிய அமைச்சர், கூட்டுறவு சங்கங்களின் மூலம், மாவட்டத்தில் சுமார் ஆயிரத்து 500 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ராசிபுரம் வட்டம் சவுதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பெட்ரோல் விற்பனை நிலையத்தை அவர் திறந்துவைத்தார்.

காக்காவேரி, மங்களபுரம், முள்ளுக்குறிச்சி, அணைப்பாலையம், ஆகிய இடங்களில் வேளாண் வணிக சேவை மையங்களையும் திரு மதிவேந்தன் திறந்துவைத்தார்.

<<<<<<<>>>>>>

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

காலை எட்டு மணிமுதல் வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளது.

முதலில் அஞ்சல் வாக்கு எண்ணிக்கையும், அதனைத் தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படவுள்ளன.

இந்த வாக்கு எண்ணிக்கை 14 மேசைகளில் 20 சுற்றுகளாக நடைபெறவுள்ளது.

150-க்கும் மேற்பட்டோர் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் சுமார் ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட காவலர்கள்ம ற்றும் மத்திய துணை காவல் படையினர் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

<<<<<<<>>>>>>

குன்னூர் தோட்டக்கலை பண்ணை மற்றும் சிம்ஸ் பூங்காவில் இரண்டாவது சீசனுக்காக, இரண்டு லட்சம் மலர் நாற்றுகள் நடவு பணி இன்று தொடங்கியது.

பிரான்ஸ், நெதர்லாந்து, ஹாலந்து உள்ளிட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைகளிலிருந்து நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, நடப்பட்டு வருவதாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் திருமதி ஷிபிலா மேரி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

திருநெல்வேலி மாவட்டம் பாசநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தாமிரபரணி பாசன பகுதிகளுக்கு வரும் திங்கட்கிழமை முதல் தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

80 நாட்களுக்கு திறந்துவிடப்படும் இந்த தண்ணீரினால், திருநெல்வேலி மாவட்டத்தின் மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், தென்கால் மற்றும் வடகால் வாய்க்கால்களின்கீழ் உள்ள 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

<<<<<<<>>>>>>

நீலகிரி, திண்டுக்கல் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருச்சியில் காவிரி ஆற்றின் குறுக்கே 16 கோடி ரூபாய் செலவில் புதிய பாலம் கட்டுவதற்கு மாநில அமைச்சர்கள் திரு கே என் நேரு, திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆகியோர் இன்று அடிக்கல் நாட்டினர்.

-------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் குழந்தைகள் பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர்களுடன் ஆட்சியர் திரு ஸ்ரீதர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

----------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் 13-ஆவது புத்தகத் திருவிழாவை ஆட்சியர் திருமதி சரயு இன்று தொடங்கிவைத்தார்.

---------

காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள தமிழ்நாடு அரசு மருத்துவ கிடங்கினை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

--------------------

சேலம் மாநகரில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதோடு பொதுமக்கள் நேசிக்கும் காவல்துறையாக செயல்படுவோம் என புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட மாநகர காவல் ஆணையர் திரு பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

--------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடைகளில் நாளை குறைதீர்வு முகாம் நடைபெறவுள்ளது.

----------------

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே பழைய பனியன் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் ஆலையில் இன்று அதிகாலை நேரிட்ட தீ விபத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்தன.

----------------

அரக்கோணம் அருகே ஓடும் ரயிலில் 14 கிலோ கஞ்சா கடத்திய 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

---------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற ஆனித் திருமஞ்சன விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

----------------

நாகை மாவட்டம் திருக்கண்ணங்குடியில் அமைந்துள்ள காளகஸ்தீஸ்வர கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

**<<<<<<<END>>>>>>**